திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, சர்க்கரை உற்பத்தி இயக்குநர், கரும்பு வளர்ச்சிப் பணியை வேளாண்மைத் துறை இயக்குநரிடமிருந்து தனக்கு ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில்தான் அரசு அதைப் பரிசீலனை செய்து முடிவு எடுத்திருக்கிறது என்று அறிகிறேன். அப்படி முடிவு எடுப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சர்க்கரை இயக்குநர் சர்க்கரை உற்பத்தியைப் பெருக்கும் பணியில் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார். கரும்பு வளர்ச்சிக்கான பணியிலே அத்துறைக்கு அனுபவம் இல்லை. அதனால் வேளாண்மை இயக்குநர் துறையில் கரும்பு வளர்ச்சிப் பணியில் நல்ல அனுபவம் உள்ள அலுவலர்கள் பணிபுரிகிறார்கள் என்ற காரணத்தினால் கரும்பு வளர்ச்சிப் பணி வேளாண்மை இயக்குநரிடமே இருக்கவேண்டுமென்று அரசு முடிவு செய்தது.

தமிழகத்தில் ஸ்வீடன் நாட்டு உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள நீர் ஆராய்ச்சித் திட்டம்.

*வினா எண் 427—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்கு உதவும் வகையில் தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம், ஸ்வீடன் நாட்டு உதவியுடன் நீர் ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை மேற்கொள்ள அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஸ்வீடன் நாட்டு உதவியுடன் கோவையில் நீர் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைப்பது சம்பந்தமான கருத்துரு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆய்வில் இருந்து வருகிறது. இதற்கு ஆகும் செலவு ரூ. 150 இலட்சங்களையும் ஏற்க ஸ்வீடனின் பன்னாட்டு வளர்ச்சிக் கழகம் முன் வந்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளில் கடல் நீரிலிருந்து விவசாயம் செய்கிறார்கள். அதே மாதிரி நீர் ஆராய்ச்சியில் தமிழ்நாட்டில் உள்ள சாகுபடியின் பரப்பை அதிகப்படுத்த கடல் நீரில் விவசாயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

1982 மார்ச் 9]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே நிலத்தில் நாம் செய்கின்ற வேளாண்மையை முறையாக ஒழுங்காக செயல்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்ததற்குப் பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர் ஆராய்ச்சிக்கு ரூபாய் ஒதுக்கு வதற்கு அரசு ஆவன செய்யுமா? ஸ்வீடன் நாட்டில் சோஷியல் பாரஸ்டிற்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. ஸ்வீடன் நாட்டிலே உள்ளதையெல்லாம் சொல்ல ஆரம்பிக்க வேண்டாம்.

திரு. இரா. தாமரைக்கனி: அதற்காகப் பணம் 6 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அந்த ஆராய்ச்சிப் பணிக்கு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நான்கு வருட காலத்திற்கு 114·13 லட்சங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

உள்ளாட்சிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கும் திட்டம்.

*வினா எண் 428—திரு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளாட்சியின்கீழ் பணியாற்றும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) அதன் மீது நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றியங்களின் ஆசிரியர்கள் 1-6-1981 முதல் அரசு ஊழியர்களாகி விட்டார்கள். மாநகராட்சிகளின் ஆசிரியர்கள் குறித்து கோரிக்கை எதுவும் அரசுக்கு வரவில்லை. நகராட்சிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.